முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1194

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

05.01.2023, வியாழக்கிழமை

1. ஆறுமுக ஞானியே அரங்கா வாழ்க
அன்னதான சேவையாற்றும் தேசிகா வாழ்க
மாறுதலை கலியில் செய்தே தீருவேன் என
மாதவசியாய் வந்து பிறந்த ஞானதேசிகனே வாழ்கவாழ்க
2. வாழ்க என வாழ்த்தி சுப்ரமணியர் யானும்
வழங்குவேன் அரங்கனுக்கு ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் மார்கழி மாதம் 21 ம் நாள் 05.01.2023, வியாழக்கிழமை)
ஊழ்போக்கும் மகா சக்திகொண்ட குரு நீயப்பா
உலகை மாற்றும் மாதர்மபலம் கொண்ட தவசி நீயப்பா
3. அப்பனே உன்னை கண்ட மக்களுக்கு
ஆறுமுகன் என் காட்சி உறுதியாகும்
ஒப்புகொண்டு உன்னை வணங்கும் மக்களுக்கு
உலகில் பிறவாத பெரும்பேறும் உறுதியாகும்
4. ஆகவே அரங்கன் நீ தரும் தீட்சை
அன்பர்களுக்கு ஆறுமுகன் யான் தரும் தீட்சையாகும்
வகைபட உன் கொள்கை தர்மத்தை ஏற்று
வையகத்தில் வாழ்வாதாரமென முழுமைபட சரணாகதிகொண்டு
5. கொண்டுமே உன்வழி தொடர்ந்து
குறையில்லா சேவையாற்றும் தொண்டர்கட்கு
உண்டாகும் இந்த பேருலகில் ஞானியாகும் வாய்ப்பும்
உருவாகும் அவர்களுக்கெல்லாம் அழியாமை என்கின்ற மகா சக்தி
6. சக்திகூடி அரங்கன் உன் சக்தியாகவே
சகலரும் ஞானிகளாக இந்த பேருலகில்
யுக்தி உன் தீட்சைபலத்தின் வழி
உயர்வாக உலகோர் ஞானிகளாகி இனிதே
7. இனிதே இந்த பேருலகை காக்கவல்ல
பிரம்ம ஞான மகத்துவமிக்க
கனிவேலவன் என் தலைமைக்கு வந்து
உலகோர் கருணைமிக்க ஞான ஆட்சி தரக்கூடும்
8. கூடவே அரங்கனை தொடர்ந்து வந்தால்
குவலயத்தில் இந்த அற்புதம் சடுதி நடந்தேறும்
நாடெங்கும் மாற்றம் கொள்ள
ஞான அவதாரம் கொண்ட அரங்கனாலே இது சாத்தியமாகும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–